1996 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 76 கிராமிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ? ஏற்கெனவே 10,000 பொது மக்களுக்கென்று இருந்ததை 5,000 பொது மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று நம்முடைய ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அந்த கிராமிய மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள். 10,000 பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எங்கேயும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தியா முழுவதும் 30,000 பேர்கள் மக்கள் தொகை கொண்ட இடங்களிலேதான் ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல 10,000 பேர்களுக்கோ அல்லது 5,000 பேர்களுக்கோ இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்படுவதற்கான உத்தேசம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 208, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

208—

துணை மின் நிலையம் அமைத்தல்

***1791—திரு. அ. மாரிமுத்து :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

ஆம்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று தெரிவித்ததற்கு முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் துணை மின்நிலையம் அமையவிருக்கிறது. அதன் மூலம் பயனடையக் கூடிய கிராமங்கள் எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானூர் பகுதியிலுள்ள திருச்சிற்றம்பலத்திற்கு இப்போது பாண்டிச்சேரியிலுள்ள குறும்பப்பட்டு மற்றும் வில்லியனூரிலுள்ள துணை மின் நிலையத்திலிருந்தும், கந்தமங்கலத்திலுள்ள துணை மின் நிலையத்திலிருந்தும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியின் கூடுதல் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, திருச்சிற்றம்பலத்தில் 110/22 கே.வி. துணை மின் நிலையம் நிறுவும் திட்டம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எடுக்கப்பட்டு இப்போது நடைமுறையில் இருக்கிறது. இந்தத் துணை மின் நிலையத்திற்குத் தேவையான 2.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக ரூ. 2,96,000 நிதியும் ஒதுக்கப்பட்டு 25.6 கி.மீ. தூரமுள்ள பாதையில் இந்த மின்சாரம் விநியோகிக்கப்படும்.

முற்பகல் 9-45

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திலே நன்றி சொல்வதோ, பாராட்டுவதோ, குற்றச்சாட்டு கூறுவதோ கூடாது என்பது மரபு, உறுப்பினர்கள் அனைவரும் அதை கடைப்பிடிக்கவேண்டும். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது குத்தாலம் தொகுதி, குடவாசல் பகுதியில் அமைக்க அனுமதிக்கப்பட்ட துணை மின் நிலையம் குறுகிய காலத்திற்குள் அமைக்கப்படுமா என்பதையும், மணல்மேடு பகுதியில் உள்ள துணை

1996 ஆகஸ்ட் 22]

மின் நிலையத்தில் புதிய மின்மாற்றி வைக்க அனுமதி இருந்தும், இதுவரை அது நிறுவப்படாததால் உடனடியாக நிறுவப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலே சந்தித்து என்னிடத்திலே விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 209, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

209—

நிலவரி வசூல் ரத்து செய்தல்

***2193—திரு. இரா. ஆவுடையப்பன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளிடம் நிலவரி வசூல் செய்வது ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நெல்லை மாவட்டம் ஏற்கெனவே வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிலவரியும் ரத்து செய்ய ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிலவரியை ரத்து செய்தாலும், வறட்சியால் மிக அதிகமாக இப்பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், வறட்சிப் பணியை மேற்கொண்டு அங்கே வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன்